# தமிழ்நாடு BSNL உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு

## மாநிலக் குழு கூட்ட முடிவுகள்.

அன்பார்ந்த தோழர்களே, தோழியர்களே,

நமது மாநிலக் குழு கூட்டம் கடலூரில் 30.1.2015 அன்று தோழியர். பங்கஜவல்லி தலைமையில் நடைபெற்றது.

மறைந்த நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர், பாகிஸ்தானில் கொல்லப் பட்ட பள்ளிக் குழந்தைகள், திரைக் கலைஞர்கள் கே. பாலச்சந்தர், பாலு மகேந்திரா, ருத்ரய்யா ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானத்தை தோழியர். எம். மல்லிகா முன்மொழிய, ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

அனைவரையும் கடலூர் தோழியர் சரோஜாதேவி வரவேற்றார். மாநில அமைப்பாளர் தோழியர். ப. இந்திரா கூட்டத்தின் ஆய்படு பொருளை அறிமுகம் செய்து பேசினார்.

அனைத்துத் தோழியரும் ஆக்க பூர்வமான கருத்துக்களை முன்வைத்து விவாதத்தில் பங்கேற்றனர்.

பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டன.

1) ஜூலை மாதம் துவங்கப் பட்ட பெண் ஊழியர் கோரிக்கை கையெழுத்து இயக்கம் பல மாவட்டங்களில் நடைபெறவில்லை. எதிர்வரும் பிப்ரவரி 25 டெல்லி பேரணியின் போது ஒப்படைக்க வேண்டியுள்ளதால், பிப்ரவரி 20-க்குள் மாநில அமைப்பாளரிடம் இயக்கத்தை முடித்து ஒப்படைக்க வேண்டும். தேவையெனில், மாவட்டச் சங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும்.

2) BSNL பாதுகாப்பு கையெழுத்து இயக்கத்தில் பல மாவட்டங்களில் தோழியர் பங்கேற்றுள்ளனர். அவர்களுக்கு பாராட்டுக்கள் !

பிப்ரவரி டெல்லி பேரணியில் 1 கோடி கையெழுத்துக்களை பிரதமர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டியுள்ளதால், நமது தோழியர் அனைவரும் இந்த இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும். கல்லூரிகள், கலெக்டர் அலுவலகம், பேருந்து நிலையம், ரயில் நிலையம், எல்.ஐ.சி, வங்கிகள் உள்ளிட்ட இடங்களில் திட்டமிட்டு பணியாற்றி, பிப்ரவரி 20-க்குள் முடிக்க வேண்டும்.

**3) மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினத்தன்று சாக்லேட்டுகளுடன் கூடிய வாழ்த்து அட்டைகள், பேனர், சிறப்புக் கூட்டங்கள், நகரில் நடைபெறும் பொதுவான நிகழ்ச்சிகளில் பங்கேற்பு, நல உதவிகள் முதலியவற்றைத் திட்டமிட்டு சிறப்பாக அனுசரிக்க வேண்டும்.**

**பெண் சமத்துவம், பெண்கள் பாதுகாப்பு, பெண் ஊழியர் கோரிக்கைகள் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், சிறப்பு கூட்டத்திற்குச் செல்லும் போது சிறிய தூரம் தீபமேந்திச் செல்லுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்.**

மாநிலக் குழு சார்பில் 3000 நோட்டீஸ்கள் வெளியிடப் படும்.

பல தோழியர் டெல்லி பேரணியில் கலந்து கொள்வதால், நிகழ்ச்சிகளை முன் கூட்டியே திட்டமிட்டு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

பெண்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், பெண்களை மதிப்போடு பார்க்கின்ற சமூகப் பார்வையை உருவாக்கும் விதத்தில் பெண்கள் தினத்தை சிறப்பாக அனுசரிக்க வேண்டும்.

4) மாநிலக் குழுவுக்கு இணையதளம் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டது. மாநிலக் குழு உறுப்பினர்கள் தலா ரூ. 500 அளிப்பதன் மூலம் முதற்கட்ட வேலைகளைத் துவக்கவும் கருத்துக்கள் முன் வைக்கப் பட்டன. தலைவர்களோடு இக்கருத்துக்கள் ஆலோசிக்கப் பட்டு முடிவெடுக்கப் படும்.

டிசம்பர் மாதம் வேலூரில் நடைபெற்ற அகில இந்திய ஓய்வூதியர் சங்க மாநில மாநாட்டில், மாநிலப் பொருளாளராக தோழியர் கீதா, துணைத் தலைவராக தோழியர். காளிபிரசாத், துணைச் செயலராக தோழியர் பங்கஜவல்லி ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். நிரந்தர ஊழியர் சங்கத்துக்கு ஏராளமான பணிகளைச் செய்த இந்தத் தோழியர், பணி நிறைவு பெற்ற பின்னும் தொய்வின்றி ஊக்கத்தோடு பொதுப்பணிகளையும் மேற் கொண்டுள்ளனர். அவர்களை மாநிலக் குழு பாராட்டுகிறது !

கடலூர் மாவட்ட அமைப்பாளர் தோழியர் உஷா நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பாதுகாப்பு கருத்தரங்கத்தின் இடையறாத பணிகளுக்கு நடுவே, கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திட திருவள்ளுவர் மண்டபத்தை ஏற்பாடு செய்தது உட்பட அனைத்து உதவிகளும் செய்து நடத்திக் கொடுத்த கடலூர் மாவட்டச் சங்கத்துக்கும், நிர்வாகிகளுக்கும், தோழர்களுக்கும் கடலூர் மாவட்ட தோழியருக்கும் மாநிலக் குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது !

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**P.இந்திரா**

**அமைப்பாளர்**